**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**<u>OS. 16/2010</u>**

2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12-ம் நாள் PW.1 என்பவரின் சாட்சியாகிய நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10வது விதியின் படி) திரு.E.கோவிந்தராஜன் பென்ச் கிளார்க் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | சிவபிரகாச **ஸ்ரீ வீரேஸ்வர** தேசிகேந்திர சுவாமிகள் | விலாசம் |
| த/பெ | : | | |
| வயது | : | | |
| மதம் | : | | |
| தொழில் | : | | |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். **வாதி தரப்பில் வா.சா.ஆ.7 ஆவணம் குறியீடு செய்கிறேன்.** பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

உங்களுக்கு என்ன வயது என்றால் எனக்கு 89 வயது ஆகிறது. நான் தற்போது மடாதிபதி ஆக இருக்கிறேன் ஏற்கனவே தமிழ் பண்டிட்டாக இருந்து ஓய்வு பெற்றுள்ளேன். 1971 ஆம் ஆண்டு தமிழ் பண்டிட் ஆசிரியர் பணியை ராஜினாமா செய்து விட்டேன். பதவியை ராஜினாமா செய்யும்பொழுது நீங்கள் குடும்ப நடத்தி வந்தீர்களா என்றால் நான் பிரம்மச்சாரி ஆவேன். நீங்கள் 1971 முதல் 21/4/2008 வரை என்ன தொழில் செய்து வந்தீர்கள் என்றால் ராமகிருஷ்ண விவேகானந்தர் தவ இல்லம் என்று ஆரம்பித்து அதில் தலைவர் மற்றும் செயலாளர் ஆக

இருந்தேன் ஆன்மீக சொற்பொழிவு செய்து வருவேன். அந்த ஸ்தாபனம் பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்யப்பட்டது ஆகும். அவ்வாறு பதிவு செய்ததற்கு ஆவணங்கள் இருக்கிறதா என்றால் இருக்கிறது. மேற்சொன்ன காலகட்டத்தில் உங்களுடைய முகவரி என்ன என்றால் எங்கு சொற்பொழிவு செய்கிறேனோ அங்கே இருப்பேன். அனைத்து ஆசிரமங்களுக்கும் சென்று தங்குவேன். நீங்கள் நிரந்தர விலாசம் இல்லாதவர் என்று சொன்னால் பள்ளி நடத்தி வந்தேன். 1972 முதல் பள்ளி நடத்திய வந்தேன். அந்த காலகட்டத்தில் உங்களுடைய சொந்த பெயர் என்னவென்றால் ஆர்.கிருஷ்ணன் என்பது என்னுடைய பெயர் ஆனால் பிரம்மச்சாரி கிருஷ்ணன் என்று தான் கையொப்பம் போடுவேன். அவ்வாறு எந்த வருடம் வரை கையொப்பம் போட்டீர்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை 1983 க்கு பிறகு என்னுடைய பெயர் மாற்றிக் கொண்டேன். பிரம்மச்சாரி கிருஷ்ணன் என்கிற பெயரை அரசு பதிவு இதழில் கொடுத்து மாற்றிக் கொண்டீர்களா என்றல் அரசு பதிவு இதழில் கொடுத்து மாற்றிக் கொண்டேன். அந்த அரசு பதிவு இதழ் கையில் வைத்திருக்கிறீர்களா என்றால் வைத்திருக்கிறேன் உள்ளது. இயற்கையான பெயர் இருக்கும் பொழுது பெயர் மாற்றம் செய்ய வேண்டிய காரணம் என்ன என்றால் சன்னியாசம் கொடுக்கும் பொழுது என்னுடைய குருமார்கள் அவ்வாறு பெயர் மாற்றம் செய்தார்கள். உங்களுக்கு சன்னியாசம் கொடுத்தது யார் என்றால் ஒட்ட பாளையத்தில் ஐந்து வீட்டில் பிச்சை எடுத்து மற்றவர்களுக்கு சமைத்து போட்டேன். உங்களை சன்னியாசியாக மாற்றியவர் பெயர் என்ன என்றால் சுவாமி விஷதானந்தா ஆவார். அவ்வாறு செய்யும்பொழுது உங்களுக்கு சடங்குகள் செய்யப்பட்டதா என்றால் சடங்குகள் செய்யப்பட்டது. மலம்புழா ஆற்றில் தண்டம்

உடைத்துப் போட்டு விட்டு வந்தேன். அவ்வாறு சன்னியாசியாக செல்லும் பொழுது திருதண்டம் கொடுத்தார்களா என்றால் எங்கள் ஆசிரமத்தில் திருதண்டம் வைத்துக் கொள்ளக் கூடாது அதனை உடனடியாக உடைத்து போட்டு விட்டு வந்து விட்டேன். உங்களுக்கு பெயர் மாற்றம் செய்தது மடத்தில் ரெக்கார்டு இருக்கிறதா என்றால் ரெக்கார்டு கிடையாது. வா.சா.ஆ.3 பொது அதிகாரம் கொடுத்த காலகட்டத்தில் உங்களது பெயர் என்ன என்றால் சுவாமி சிதாபாணந்தா ஆகும். இவ்வாறு உங்களுக்கு பெயர் கொடுத்தது யார் என்றால் எங்களுடைய பீடாதிபதி கொடுத்தார். அங்கீகார கடிதம் கொடுத்துள்ளார். சுவாமி சிதாபாணந்தா என்ற பெயரை சிவபிரகாச ஸ்ரீ வீரேஸ்வர தேசிகேந்திர சுவாமிகள் என்று மாற்றிய பொழுது கெஜட்டில் கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன் அவ்வாறு நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. பொது அதிகார பத்திரம் காஞ்சிபுரத்தில் எழுதப்பட்டதா அல்லது பெங்களூருவில் எழுதப்பட்டதா என்றால் பெங்களூரில் தான் எழுதப்பட்டது பதிவு செய்யப்பட்டது. நீங்கள் சென்று மடாதிபதியாக இருப்பதாக சொன்னீர்களா அல்லது பெங்களூர் காரர்கள் உங்களை அணுகி கேட்டார்களா என்றால் மீடியேட்டர் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். அந்த மீடியேட்டர் எத்தனை பேர் என்றால் ஒருவர் பெங்களூர் காரர் குருமூர்த்தி மற்றொரு நபர் மாதப்பன் நீலகிரி சேர்ந்தவர் ஆவார்கள். மேற்படி பொது அதிகாரம் முன்னிலைக்கு நீங்கள் சொத்தினை மடத்தையோ மடத்தின் சொத்துக்களையோ நிர்வாக பொறுப்பு எடுத்துக் கொண்டீர்களா என்றால் எடுத்துக் கொண்டேன். 21.04.2008 மடத்தின் நிலத்தையும் மடத்தின் சொத்துக்களையும் நிர்வாக பொறுப்பு ஏற்பதற்கு முன்பாக யாருடைய

சுவாதீனத்தில் இருந்தது என்று என்றால் ஈஸ்வரய்யா என்ற பொது அதிகாரம் பெற்ற நபர் இருந்தார். 21.04.2008 ஈஸ்வர்யா பொது அதிகாரம் முன்னிலைக்கு உங்களுக்கு மடம் மற்றும் சொத்துக்களை உங்களுக்கோ அல்லது உங்களது பீடாதிபதிக்கோ ஒப்படைத்தாரா என்றால் அவர் 07.05.2007 அன்று ஈஸ்வரய்யா ராஜினாமா செய்து விட்டார். கடந்த 22.05.2007 அன்று பீடாதிபதி ராஜினாமாவை ஏற்றுக் கொண்டார். கடந்த 21.04.2008 அன்று தான் உங்களுக்கு பொது அதிகாரம் கொடுக்கப்பட்டது இடைப்பட்ட காலத்தில் யார் நிர்வாகம் செய்தது என்றால் பீடாதிபதி அவர்கள் தான் பார்த்துக் கொண்டார் நானும் இங்கு தான் இருந்தேன். 1981 ஆம் ஆண்டு ஈஸ்வரய்யா என்பவருக்கு பொது அதிகாரம் கொடுத்த பீடாதிபதி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது உங்களுக்கு பொது அதிகாரம் கொடுத்த பீடாதிபதி வேறு நபர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.